## கீழக்கரை நகர்மன்ற 25.02.2021–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

**பொருள் :1**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பொதுமக்களால் வெளியேற்றப்படும் கழிவுநீர் இந்நகராட்சியின் மூலம் PVC கழிவு நீர் குழாய்கள் மூலம் இணைக்கப்பட்டு புதுக்குடி, தட்டான்தோப்பு மற்றும் புதிய பேருந்து நிலையம் மாட்டுக் கொட்டகை பகுதிகளில் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு அங்கிருந்து மின்மோட்டார் மூலம் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் சாலையில் போடப்பட்டுள்ள PVC குழாய்கள் தொட்டிகள் மற்றும் அதன் மூடிகள் உடைப்பு ஏற்பட்டு, சாலையை பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டு சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது.

ஆகவே, மேற்காணும் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு கழிவு நீர் குழாய்கள் மற்றும் மூடிகளை உடனுக்குடன் பழுதுநீக்கம் செய்யும் பொருட்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3,50,000/–யை இந்நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், சட்டமன்ற தேர்தல் வரும் நிலையில், தேர்தல் விதி வருவதற்கு முன்பு இந்நகர்மக்களின் நலன் கருதி மதிப்பீட்டிற்கு மன்ற முன் அனுமதியும், உரிய ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர இந்நகராட்சிப் பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்காணும் பணியை மேற்கொள்ளும் பொருட்டு அனுமதிக்காக மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 117/2021/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

1. இந்நகர் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ.3,50,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021 தேர்தலுக்கான நன்னடத்தை விதி (Model Code of Conduct) வருவதற்கு முன்பு, இந்நகர்மக்களின் நலன் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரிடம் முன் அனுமதி பெறப்பட்டு, 05.03.2021–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.837 அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் :2</u>**

இந்நகராட்சி வார்டு எண் 1 முதல் 11 வரையிலான பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் மூலம் 25 பணியாளர்களை கொண்டு முதல்நிலை திடக்கழிவு குப்பைகளை சேகரிக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் எண் 6011/பி3/2017 நாள் 15.06.2017–ன் படி அனுமதி வழங்கப்பட்டு M/S. Exsernet. S.M.M.காம்ளாக்ஸ், கல்பாலம் ரோடு,கோரிப்பாளயம்,மதுரை-2. ஒப்பந்த அடிப்படையில் பணி உத்திரவு வழஙகப்பட்டு தற்போது வரை பணிகள் பார்க்கப்பட்டு வருகிறது. ஒப்பந்தபுள்ளி அடிப்படையில் 11.11.2020 வுடன் ஒப்பந்தம் முடிவடைகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி 14.06.2020–ந் தேதியுடன் முடிவடைந்ததால் மேலும் 3 ஆண்டுகளுக்கு அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில் உத்திரவினை எதிர்நோக்கி 12.11.2020 முதல் 11.02.2021 வரை 3 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்திரவிடப்பட்டது. தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அலுவலகத்தில் மேற்படி ஒப்பந்தப்புள்ளி வழங்க அனுமதிக்கும் உத்திரவு நிலுவையில் உள்ளதாலும் சட்டமன்ற தேர்தல் வருவதாலும் ஒப்பந்தப்புள்ளி பணி நடவடிக்கை மேற்கொள்ள உரிய காலம் இல்லாததாலும் M/S.Exsernet. S.M.M.காம்ளாக்ஸ், கல்பாலம் ரோடு, கோரிப்பாளயம்,மதுரை-2. நிறுவனத்திற்கு 12.02.2021 முதல் 11.05.2021 வரை மூன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்தும் அதற்கான ஊதியம் வழங்க ரூ 12,00,000/– லட்சத்திற்கு அனுமதி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**(எச்1 /1528/2012)**

அலுவலக குறிப்பு

பொதுசுகாதார நலன் அவசர அவசியம் கருதி வார்டு 1 முதல் 11 வரையிலான பகுதிகளில் தனியார் மூலம் குப்பைகள் சேகரிக்கும் பணிக்கு தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அலுவலகத்தில் மேற்படி ஒப்பந்தப்புள்ளி வழங்க அனுமதிக்கும் உத்திரவு நிலுவையில் உள்ளதாலும் சட்டமன்ற தேர்தல் வருவதாலும் ஒப்பந்தப்புள்ளி பணி நடவடிக்கை மேற்கொள்ள உரிய காலம் இல்லாததாலும் பொதுசுகாதார நலன் கருதி 3 மாதங்களுக்கு பணிநீடிப்பு செய்யவும் அதற்கான செலவினஙகளை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.838 அனுமதிக்கப்பட்டது.</u>**

**பொருள் :3**

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதியின்படி இந்நகராட்சி பகுதியில் சிறிய அளவிலான நுண் உரம் தயார் செய்தல் (On Site Compost), பெரிய அளவில் குப்பைகளை உருவாக்குபவர்கள் உரம் தயாரித்தல் (Bulk Waste Generation)- நுண் உரகிடஙகு உரம் தயார் செய்தல் மற்றும் மறு சுழற்ச்சி செய்தல் போன்ற பணிகளை (அவுட்சோர்ஸிங முறையில்) 12 பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ளுவதற்கு இவ்வலுவலக செயல்முறை ஆணை உத்திரவு ந.க.எண்49/2019/எச்1 நாள் 30.08.2019–ன் படி எவர்கீரின் என்வோரமெண்ட் சர்வீஸ் இராமநாதபுரம் நிறுவனத்திற்கு 01.09.2019 முதல் 28.02.2021 வரை பணி உத்திரவு வழஙகப்பட்டு பணிகள் நல்ல முறையில் பார்க்கப்பட்டு வருகிறது. தற்போது கீழக்கரை நகராட்சி பொதுசுகாதார பணிகளின் அவசியம் கருதி மேலும் 6 மாத காலத்திற்கு 01.03.2021 முதல் 31.08.2021 வரை பணிநீடிப்பு செய்து பணி உத்திரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(கோப்பு எண் 49/2019/எச்1)

அலுவலக குறிப்பு:

1) நகராட்சி நிர்வாக ஆணையாளர்,சென்னை அவர்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணஙக, இந்நகராட்சியில் 12 பணியாளர்களை கொண்டு (Out Sourcing) முறையில் துப்புரவு பணிகள் செய்ய ரூ-10,20,000/-க்கு செலவீனஙகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வழஙகலாம்.
2) எவர்கீரின் என்வோரமெண்ட் சர்வீஸ் இராமநாதபுரம் நிறுவனத்திற்கு 01.03.2021 முதல் 31.08.2021 வரை 6 மாத காலத்திற்கு பணிநீடிப்பு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்.839 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :4

15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை மான்யம் (Tied Grant to Non Million Plus Cities) 2020–21ன் கீழ் கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 மேலத்தெரு வளாகத்தில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கப்படவுள்ள இடத்தில் சுற்றுச் சுவர் கட்டும் பணி (Construction of Compound Wall at OHT area) ரூ.8,35,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர் மன்றத்தில் 13.01.2021ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு 10.02.2021–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை மான்யம் (Tied Grant to Non Million Plus Cities) 2020–21** | | | | |
| 1. | நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 மேலத்தெரு வளாகத்தில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கப்படவுள்ள இடத்தில் சுற்றுச் சுவர் கட்டும் பணி (Construction of Compound Wall at OHT area) | 8.35 | திரு.பி. சிவக்குமார் ஒப்பந்ததாரர், 21/52, மெயின்ரோடு தட்டாந்தோப்பு, கீழக்கரை. | ரூ.8,27,581/– மதிப்பீட்டு தொகையை விட 0.35% குறைவு |
| | | | திரு.எஸ். சுரேஸ், தங்கப்பா நகர், இராமநாதபுரம். | ரூ.8,55,344/– மதிப்பீட்டு தொகையை விட 2.99% அதிகம் |

**(கோப்பு எண். 610/2020/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட 0.35% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.பி. சிவக்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.840 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :5

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்டங்களில் அறிவுறுத்தப்பட்டுள்ளதிற்கிணங்க, இந்நகராட்சிப் பகுதியில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரில் 2 PPM அளவுக்கு குளோரின் இருக்கும் பொருட்டும், தற்போது டெங்கு தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், நகராட்சிப் பகுதிகளில் சுத்தமான குடிநீர் வழங்குவதற்கு திரவ நிலையில் குளோரின் செலுத்தும் திட்டத்தினை (Liquid Chlorination System) செயல்படுத்தும் பொருட்டும், இந்நகராட்சிக்கு ஒரு வருடத்திற்கு தேவையான 7280 லிட்டர் ஹைப்போ குளோரின் திரவம் விநியோகம் செய்வதற்குரிய ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ள பொதுப்பணித்துறை / குடிநீர் வடிகால் வாரிய 2020–2021 ஆம் ஆண்டு விலை விகிதப் பட்டியலில் (Schedule of Rate) ஹைப்போ குளோரின் திரவம் விலைவிகிதங்கள் குறிப்பிடப்படாததால் 28.12.2020–ந் தேதி பொறியாளர்களின் அறிக்கையின்படி உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு 31.12.2020–ந் தேதி இந்நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி, 13.01.2021–ந் தேதி இரண்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டு, குறைந்த விலைப்புள்ளியின் அடிப்படையில் இந்நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சி பொறியாளர்களால் ரூ.1,85,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மேற்காணும் பணியினை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர் மன்றத்தில் 29.01.2021–ந்தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது.

இந்நகர் மன்ற அனுமதியின் அடிப்படையில் ஹைப்போ குளோரின் திரவம் ஒரு வருடத்திற்கு 7280 லிட்டர் விநியோகம் செய்யும் பணிக்கு 25.02.2021–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் இந்நகராட்சி பொறியாளர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அவற்றை மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2020–2021** | | | | |
| 1. | இந்நகராட்சி பகுதிகளில் ஹைப்போ குளோரின் திரவம் (Hypo Chlorine Solution) கலந்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு ஒரு வருடத்திற்கு 7280 லிட்டர் விநியோகம் செய்யும் பணி . (as per IS 11673:1992) | 1.85 | ஸ்ரீ சாய் இண்டஸ்ட்ரிஸ், T–382, காட்டூர், திருமுல்லைவாயில், சென்னை. | ரூ.1,79,379/– மதிப்பீட்டு தொகையைவிட 2.22% குறைவு |
| | | | லெட்சுமி எண்டர்பிரைசஸ், 20/23ஏ, கதவு எண் டி , சாந்தி பிளாட், திருவான்மியூர், சென்னை. | ரூ. 1,87,532/– மதிப்பீட்டு தொகையைவிட 2.22% அதிகம் |

**(கோப்பு எண். 785/2020/இ1)**

**அலுவலகக் குறிப்பு.**

மதிப்பீட்டு தொகையை விட 2.22% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ சாய் இண்டஸ்ட்ரிஸ், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.841 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :6

அரசாணை (நிலை) எண்.79, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (மா.ந.2) துறை, நாள்.31.05.2013 மற்றும் அரசாணை (நிலை) எண்.118, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (மா.ந.2) துறை, நாள்.26.09.2014–ல் தெரிவித்துள்ளதன்படி, இந்நகராட்சி அம்மா உணவகஙகளுக்குத் தேவைப்படும் காய்கறி வகைகளை அன்றாடம் வெளிச்சந்தை விலையில் ஆறு மாதங்களுக்கு மட்டும் விநியோகம் செய்வதற்கு இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண்.187/ இ1/2020 நாள். 16.02.2021-ன்படி விலைப்புள்ளி கோரப்பட்டதில் 24.02.2021–ந் தேதி கீழ்காணும் விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதன்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு இந்நகராட்சி பணிமேற்பார்வையாளர்/பொறுப்பு அலுவலரால் (Nodal Officer) பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருட்கள் விபரம் | விலை விகிதம் | எம்.எஸ். ஜகுபர் சாதிக்,எஸ்.எம்.காய்கறி கடை,இந்து பஜார் கீழக்கரை | எஸ்.கே.எஸ்.ஜஹூர் உசேன் , காய்கறி கமிஷன் கடை,இந்து பஜார் கீழக்கரை | எஸ்.எம்.சேக் பகுதீன் , ரிச்வேல்ட் கமிஷன் கடை, கிழக்கு தெரு,கீழக்கரை |
|---|---|---|---|---|---|
| 1 | வெள்ளைப் பூசணிக்காய் / முள்ளங்கி | (கிலோ ஒன்றுக்கு) | 65 | 66 | 67 |
| 2 | சின்னவெங்காயம் | (கிலோ ஒன்றுக்கு) | 90 | 93 | 95 |
| 3 | பெரிய வெங்காயம் | (கிலோ ஒன்றுக்கு) | 64 | 65 | 65 |
| 4 | தக்காளி | (கிலோ ஒன்றுக்கு) | 64 | 65 | 66 |
| 5 | கேரட் | (கிலோ ஒன்றுக்கு) | 85 | 86 | 87 |
| 6 | கத்திரிக்காய் | (கிலோ ஒன்றுக்கு) | 65 | 65 | 66 |
| 7 | உருளை கிழங்கு | (கிலோ ஒன்றுக்கு) | 62 | 63 | 64 |
| 8 | பின்ஸ் | (கிலோ ஒன்றுக்கு) | 96 | 97 | 98 |
| 9 | கருவேப்பிலை மற்றும் கொத்தமல்லி | (கிலோ ஒன்றுக்கு) | 100 | 102 | 104 |
| 10 | பச்சைமிளகாய் | (கிலோ ஒன்றுக்கு) | 102 | 105 | 108 |
| 11 | இஞ்சி | (கிலோ ஒன்றுக்கு) | 100 | 103 | 105 |
| மொத்தம் | | | 893 | 910 | 925 |

**(கோப்பு எண். 187 /2020/இ1)**

## அலுவலக குறிப்பு

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வ.எண்.1 முதல் 11 வரையிலான ஒட்டு மொத்த இனஙகளுக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள எஸ்.எம்.ஜகுபர் சாதிக், எஸ்.எம். காய்கறி கமிஷன் கடை, கீழக்கரை விலைப் புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகராட்சி அம்மா உணவகத்திற்குத் தேவையான காய்கறி வகைகளை 01.03.2021 முதல் 31.08.2021 வரை ஆறு மாதங்களுக்கு மேற்கண்ட விலை விகிதத்தில் விநியோகம் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்களை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.842 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :7</u>**

கீழக்கரை நகராட்சியில் ஒப்பந்தகாரராக பதிவு செய்ய வேண்டி கதவு எண்.152/A II மெயின் ரோடு சாந்தி நகர், குரோம்பேட்டை, சென்னை–44 என்ற முகவரியில் உள்ள M/s. AD கன்ஸ்ட்ரக்ஸன் நிறுவனத்தின் மூலம் கொடுக்கப்பட்டுள்ள விண்ணபத்தின்படி, மேற்காணும் நிறுவனத்தை இந்நகராட்சி ஒப்பந்ததாரராக ரூ.75 இலட்சத்திற்கு மேல் பணிகள் எடுத்து செய்வதற்கும், முதல் நிலை வகுப்பு (Class I) பதிவு செய்வதற்கும் இந்நகராட்சிப் பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சி சேவை மைய பற்றுச்சீட்டு எண்.0007738, நாள்.02.02.2021ன்படி பதிவு கட்டணம் ரூ. 1000 + ரூ.10000 செலுத்தப்பட்டுள்ளது மன்றத்தின் தகவலுக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 1036/2019/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

M/s. AD கன்ஸ்ட்ரக்ஸன் நிறுவனத்தின் விண்ணபத்தினை பார்வையிட்டு மன்றம் பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.843 அனுமதிக்கப்பட்டது.</u>**

**ஒம்/–ஆ. தனலெட்சுமி,பி.காம்**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி.**